# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6

## மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச் –2024

## தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் தொடர்பான

## செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள மார்ச் – 2024, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுத, விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (தட்கல் உட்பட) தங்களது தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகளை **19.02.2024** அன்று பிற்பகல் முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள், **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று முதலில் "**HALL TICKET**" என்ற வாசகத்தினை '**Click**' செய்தால் தோன்றும் பக்கத்தில் உள்ள **"HIGHER SECONDARY FIRST YEAR / SECOND YEAR- MARCH- 2024 PRIVATE CANDIDATE HALL TICKET DOWNLOAD**" என்ற வாசகத்தினை 'Click' செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth), பதிவு செய்து, அவர்களுடைய தேர்வுக் கூட நுழைவுச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) மற்றும் இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வெழுதவுள்ள தனித்தேர்வர்களுக்கு இரண்டு தேர்வுகளுக்கும் சேர்த்து, ஒரே தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு மட்டும் வழங்கப்படும்.

மார்ச் – 2024, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கால அட்டவணைகளை (TIME TABLE) **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

ஒம்/-
அரசுத் தேர்வுகள் இயக்குநர்

நாள்: 15.02.2024
இடம்: சென்னை – 600 006.